FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319494

1. District : Salem மாவட்டம் | PS: V&AC காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 17/AC/2025 முத.அ. எண் | Date: 24.09.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of | Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Corruption Act, 1988 as. | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: amended in 2018. | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 1) Two times in the month of August 2025. 2) On 22.09.2025 at afternoon. 3) On 23.09.2025 at about 13.30 hrs and 13.50 hrs.

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.09.2025 | Time : நேரம் 21.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.09.2025 | Time : நேரம் 09.30 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் —

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 2 kms South.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி c/o. Special Tahsildar (Land Acquisition) Room No. 404, District Collectorate, Salem.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. Tamilarasan | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ponnusamy

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 43 | (d) Nationality : நாட்டினம் Indian. | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் Milk Vendor | (g) Address : முகவரி No. 12/164, Moolapathai Koranampathi Post, Edapadi Tk, Salem Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Govindaraj, Special Tahsildar (Land Acquisition) Chennai - Kanyakumari Industrial Corridor Project, Sankagiri Unit.
2) Tr. Venkatachalam, Govt. Jeep Driver of Tahsildar Edapadi Taluk, Salem Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted.

Separate sheets Enclosed.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு P. [illegible]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

24/09/2025

15 Date & Time of despatch to the court: 24.09.25
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 24/09/2025
10.30 hrs.

Name: பெயர் M. Nallammal,
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police,
VPAC, Salem.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.17/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 23.09.2025-ஆம் தேதி செவ்வாய்கிழமை இரவு சுமார் 09.30 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, P.தமிழரசன், S/o.பொன்னுசாமி, 12/164, மூலப்பாதை, கோரணம்பட்டி அஞ்சல், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல் P.தமிழரசன், S/o.பொன்னுசாமி, 12/164, மூலப்பாதை, கோரணம்பட்டி(Po), எடப்பாடி (Tk), சேலம் (Dt). பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புதுறை, சேலம் மாவட்டம். ஐயா, நான் எடப்பாடி தாலுக்கா, மூலப்பாதையில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். பால் வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு கச்சுப்பள்ளி கிராமம் சர்வே எண்.361/1C4-ல் பூர்வீகமாக பாத்தியப்பட்ட நிலம் சுமார் 13 சென்ட் இருந்தது. அதில் இருந்த ஒரு சிமெண்ட் அட்டை கட்டிடம் உட்பட சுமார் 3 சென்ட் நிலம் ஓமலூர் - சங்ககிரி - திருச்செங்கோடு - பரமத்தி SH 86 சாலையை நான்கு வழிச்சாலையாக விரிவாக்கம் செய்யும்போது நெடுஞ்சாலை துறையினரால் கையகப்படுத்திக்கொள்ளப்பட்டு அதற்கான இழப்பீட்டு தொகையும் வழங்கினார்கள். அந்த 13 சென்ட்டில் கையகப்படுத்தப்பட்ட நிலம் போக மீதி நிலத்தை கடனுக்காக பத்திர பதிவு செய்ய வேண்டியிருந்தது. அதற்காக மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகம் சென்று விசாரித்தபோது, நில எடுப்பில் சம்பந்தப்பட்ட சர்வே எண்களில் பத்திர பதிவு செய்ய நில எடுப்பு அலுவலகத்தில் இருந்து NOC பெறவேண்டும் என்றும் அதற்காக என்னை ஒரு கடிதம் கொடுக்க சொன்னார்கள். அதன்படி நான் 29.07.2025-ம் தேதி மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அவர்களுக்கு ஒரு கடிதம் கொடுத்தேன். அதன் பேரில் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அவர்கள் தனி வட்டாட்சியர், நில எடுப்பு, சென்னை-கன்னியாகுமரி தொழிற்தடத்திட்டம், சங்ககிரி அலகு அவர்களுக்கு 31.07.2025-ம் தேதி கடிதம் அனுப்பியிருந்தார். நான் அந்த கடிதம் குறித்து சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அறை எண்.404-ல் தனி வட்டாட்சியர் நில எடுப்பு, அலகு-1 அவர்களை சென்று பார்த்தேன். அப்போது அங்கு நில எடுப்பு தனி வட்டாட்சியராக பணிபுரியும் கோவிந்தராஜ் அவர்கள் எங்களது இடத்தை நேரில் வந்து பார்வையிடுவதாக தெரிவித்தார். அதன் பின்னர் ஒருநாள்

எடப்பாடி வட்டாட்சியர் அவர்களின் ஓட்டுநராக பணிபுரியும் வெங்கடாசலம் அவர்கள் எனக்கு செல்போனில் கூப்பிட்டு நிலஎடுப்பு தனிதாசில்தார் அவர்கள் உங்க நிலம் குறித்து ரிப்போர்ட் அனுப்புவதற்கு ரூ.15,000/- முதல் ரூ.20,000/- வரை கொடுக்கவேண்டியிருக்கும் என்று தெரிவித்தார். நான் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். அதன் பின்னர் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ஒருநாள் தனி வட்டாட்சியர் கோவிந்தராஜ் எனது நிலத்தை வந்து பார்வையிட்டு சென்றார். அன்றைய தினமே டிரைவர் வெங்கடாசலம் எனக்கு போன் செய்து ரூ.5,000/-ம் நிலஎடுப்பு தனிதாசில்தார் அவர்களுக்கு கொடுக்கவேண்டும், அப்பொழுதுதான் ரிப்போர்ட் அனுப்புவார் என்று சொன்னார். பின்னர் எனது ரிப்போர்ட் குறித்து தனி வட்டாட்சியர் கோவிந்தராஜ் அவர்களை போனில் தொடர்புகொண்டு கேட்டபோதெல்லாம் இன்னும் அனுப்பவில்லை என்று சொன்னார். ஆகையால் நான் 22.09.2025-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு சேலம் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள நில எடுப்பு தனி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அவரை பார்க்க சென்றேன். அவர் அலுவலகத்தில் இல்லை. அன்றே டிரைவர் வெங்கடாசலம் எனக்கு போன் செய்து, உங்க ரிப்போர்ட் அனுப்ப கேட்டிருந்த ரூ.5,000/- ரெடியா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன். அதற்கு ரெடியான பின்னர் என்னிடம் கொண்டுவந்து கொடு, நான் கோவிந்தராஜ் சார்கிட்ட சொல்லிடறேன், அவர் ரிப்போர்ட் அனுப்பிவிடுவார் என்று சொன்னார். நான் வேறு வழியில்லாமல் சரி என்று சொன்னேன். இன்று 23.09.2025-ம் தேதி மதியம் சுமார் 01.30 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று நில எடுப்பு தனிவட்டாட்சியர் கோவிந்தராஜ் அவர்களை பார்த்து எடப்பாடி வட்டாட்சியர் அவர்களின் டிரைவர் வெங்கடாசலம் என்னிடம் உங்கள் பெயரைச்சொல்லி பணம் கேட்கிறார் என்று சொன்னேன். அதற்கு அவர் நான்தான் வெங்கடாசலத்தை கேட்க சொன்னேன் என்றும், ஏற்கனவே தான் எடப்பாடியில் பணிபுரிந்துள்ளதாகவும், தானும் வெங்கடாசலமும் மிகவும் நெருக்கமானவர்கள் என்றும், ஆகையால் அவர் சொன்னமாதிரி ரூ.5,000/-ஐ அவரிடம் கொடுத்துவிடுங்கள், நான் வாங்கிக்கொள்கிறேன், உங்க ரிப்போர்ட் இன்றைக்கு அனுப்பிவிடுகிறேன் என்றும் சொன்னார். பின்னர் இன்று 23.09.2025-ம் தேதி மதியம் சுமார் 01.50 மணிக்கு டிரைவர் வெங்கடாசலம் அவர்களுக்கு செல்போனில் பேசி தனிவட்டாட்சியர் கோவிந்தராஜ் அவர்களை பார்த்தது குறித்து சொன்னேன், அப்போது அவர் கோவிந்தராஜ் சார் என்னிடம் ஏற்கனவே சொல்லிவிட்டார். நீ பணத்தை கண்டிப்பா

'கொடுத்துவிடுவாய் என்று நம்பி அவரிடம் ரிப்போர்ட் தயார் செய்ய சொல்லிவிட்டேன், சீக்கிரம் பணத்தை ரெடிபண்ணிட்டு எனக்கு போன் செய் என்றும் சொன்னார். எனது நிலத்தை பத்திரபதிவு செய்வதற்கு தேவையான ரிப்போர்ட் வழங்குவதற்கு நில எடுப்பு தனி வட்டாட்சியர் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. என்னிடம் லஞ்சமாக கேட்கப்பட்ட பணம் ரூ.5,000/-ம் உடன் எடப்பாடி வட்டாட்சியரின் டிரைவர் வெங்கடாசலம் அவர்களை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.5,000/- கேட்ட நில எடுப்பு தனிவட்டாட்சியர் கோவிந்தராஜ் மற்றும் எடப்பாடி வட்டாட்சியரின் டிரரைவராக பணிபுரியும் வெங்கடாசலம் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/-xxxxxx (P.தமிழரசன்) 23.09.2025) Sir, Received the above computer typed complaint on 23.09.2025 at about 21.30 Hrs. Sd xxxx (M.Nallammal) 23/09/2025, Inspector of Police, V & AC, Salem.

Sir, The genuineness of the informant was verified through sources and nothing came to adverse and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from the DVAC and registered a case in Salem V & AC Cr.No.17/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 24.09.2025 at 09.30 hrs. Sd xxxx (M.Nallammal) 24/09/2025, Inspector of Police, V & AC, Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

(M.நல்லம்மாள்) 24/09/2025
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.